MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# நற்றிணையில் பெயரறியாப் புலவர்களின் பாடல்கள் காட்டும் பழந்தமிழர் வாழ்வியல்

முனைவர் **அ.எபநேசர் அருள்ராஜன்**,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி) சிவகாசி.

DOI 10.5281/zenodo.12800765.

**Abstract :**

**Literature is the historical trace of a period. A treasure trove of culture. A medium of transmission of traditions. While it is known that, Sangam literature in Tamil such as Song and Sumam also record and show the multi-dimensionality of Tamils as mentioned above. In the literature called Naritainya, the first book of the eight; The purpose of this article is to record and show the news of Palantamizar culture, profession, rituals, beliefs, tools, and the joys expressed through animals as an example of Palantamizar life through the six songs of Jambatu sung by unknown poets.**

**Key Words : Sangam Literature - Natrinai - Unknown Poets**

## முன்னுரை

இலக்கியம் ஒரு காலகட்டத்தின் வரலாற்றுச் சுவடு. பண்பாட்டின் பெட்டகம். மரபுகளைக் கடத்தும் ஊடகம். என்றெல்லாம் அறியப்படும் நிலையில், தமிழில் சங்க இலக்கியங்களான பாட்டும், தொகையும்கூட, மேற்கூறியவாறு தமிழர்களது பல்பரிமாணங்களைப் பதிவு செய்து காட்டுகின்றன. எட்டுத்தொகையுள் முதல் நூலான நற்றிணை எனும் இலக்கியத்தில்; பெயர் தெரியாத புலவர்கள் பாடிய ஐம்பத்து ஆறு பாடல்கள் வழியாக, அப்புலவர்கள் எடுத்துக்காட்டுகின்ற பழந்தமிழர்களது பண்பாடு, தொழில், சடங்குகள், நம்பிக்கைகள், கருவிகள், விலங்குகள்வழி உணர்த்தும் பேருண்மைகள் போன்ற செய்திகளைப் பழந்தமிழர் வாழ்வியலாகப் பதிவுசெய்து காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழர்; பண்பாடு

நிலத்தைப் பண்படுத்திப் பக்குவப்படுத்துவது போலப் பழந்தமிழர் தம் நாகரிக வளர்ச்சியின் விளைவாகப் பண்பட்ட நிலைக்கு முன்னேறினர். இதன் விளைவாக அவர்களிடத்துத் தோன்றிய பழக்க வழக்கங்களும் சிந்தனைகளும் மிகுந்த நேர்த்;தியுடையனவாக விளங்கின.இதனைச் சங்கஇலக்கியப் பாடல்கள் முன்வைக்கின்றன. களவு கற்பு என்கின்ற இரண்டு நிலைகளிலும் தலைவன் தலைவி தோழி இவர்களுக்கு இடையேயான உரையாடல் மிகுந்த அறிவுத்திறன் கொண்டமைகின்றதைக் காணமுடிகின்றது.

## வாழ்த்தும் முறைமை


http://Creativecommons.org//license/by/4.0/.

ஒரு நன்மையைப் பெறும் நிலையில் அதனைத் தமக்கு ஈந்தோரை, அல்லது அதற்குக் காரணமாக இருந்தோரை வாழ்த்தும் பண்பாடு சங்க மாந்தர்களிடம் இருந்துள்ளது. இயற்கைப் புணர்ச்சி புணர்;ந்த தலைவன் தனக்கு இத்தகைய இன்பத்தை நல்கிய தலைவியின் பெற்றோரை வாழ்த்துகின்றான்.

**யார் மகள் கொல் இவள் தந்தை வாழியர்**
**................ ..............**
**திண்தேர்ப் பொறையன் தொண்டி**
**தன்திறம் பெறுக இவள் ஈன்ற தாயே.** (நற்றிணை : பா.எ 8)

இவள் யாருடைய மகள், இவளது தந்தை வாழ்க என்று தலைவியின் அழகில் இன்பம் துய்த்த தலைவன், தான் பெற்ற இன்பத்திற்குக் காரணமாக இருந்த தலைவியின் தாய், தந்தையை வாழ்த்துகின்றான். அவ்விதம் வாழ்த்தும் போது முறைசெய்து காக்கும் மன்னன் ஒருவனால் அவனது நாடும் மக்களும் எத்தகைய செழிப்புற்று இருக்குமோ அந்நாட்டைப்போல் வாழ்க என்று வரலாற்றைப் பதிவுசெய்து வாழ்த்தும் மரபு தலைவனிடம் உள்ளது. திண்ணிய தேரினை உடைய சேரன் பொறையன் என்ற மன்னனது தொண்டி என்ற நாடுபோல இவளது தாய் வாழ்க என்று வாழ்த்துகின்றான்.

## நம்பிக்கை சார் வாழ்வியல்

சங்க கால மக்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக இயற்கையும், அதுசார்ந்த நம்பிக்கையுமே இருந்தன. தலைமாந்தர்களின் மனநிலைக்கு ஏற்ப இயற்கையும், விலங்குகளும் தங்களை முகங்காட்டிக் கொண்டன. பிரிவின் வலியில் தேற்றுவதற்கும், இன்பத்துய்ப்பின் அருமையை உணர்த்துவதற்கும், குடும்பமாய் வாழ்;வதன் அவசியத்தை உணர்த்துவதற்கும், இயற்கைசார்ந்த நிமித்தங்களும், சகுனங்களும் பயன்பட்டன. தலைமாந்தர்கள் அவற்றைக் காணும்போதெல்லாம் தங்களின் சிந்தனைமுறையில் மாற்றம் கண்டனர். பிரிவைத் தவிர்த்தனர். இன்பத்தை நாடினர். துயர் களைந்தனர். தேறுதல் பெற்றனர். "இன்னே வருகுவர் நும் தாயர்"(முல்லைப்பாட்டு 12-16) என்ற முல்லை ஆய்ச்சியின் குரலைப்போலவே நற்றிணைப்பாடல்களும் நிமித்தங்கள், நற்சான்றுகள் வழி இழந்து போன நம்பிக்கையை மீட்டு ஆறுதல் தருகின்றன. நிமித்தங்கள் தலைமக்களின் வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாதன.

## நெல்லுக்கு மழைபோல் இறங்கி வந்தவன்

தலைவிக்குத் தலைவன் எப்போது தன்னை மணம் செய்து கொள்வான் என்ற கேள்வி இருந்துகொண்டேயிருக்கும். பொருளீட்டச்சென்ற தலைவனின் வருகையைத் தோழி இயற்கை வழியாக எடுத்துக்காட்டி விளக்குகின்றாள். நெல் மழைவேண்டி நிற்கிறது. அதன் தாகத்தைத் தணிக்க மேகம் மழை பொழிகின்றது. இதை நல்நிமித்தமாகக் காண்கிறாள் தோழி.

**பீளொடு திரங்கிய நெல்லிற்கு**
**நள்ளென் யாமத்து மழை பொழிந்தாங்கே.** (நற்றிணை : பா.எ.22)

மழையைப்போல இறங்கி வந்தவன் நம் தலைவன் என்று திருமணத்தை உறுதிப்படுத்துகின்றாள். அதன் வழியாகத் தலைவியின் எதிர்பார்ப்புக்கு ஆறுதல் அளிக்கின்றாள்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**நோன்பியர் தந்த நிம்மதி**

நோன்பு நோற்கும் பெண்கள் தங்களது வேண்டுதல் நிறைவேற வேண்டும் என்றே நோன்பிருப்பர். அத்தகைய வேண்டுதல் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கையில் அவர்கள் தங்களது நோன்பினை முடித்துக்கொண்டு, தங்களின் தீவிரமான பசியை ஆற்றிக்கொள்ள உணவு உண்ணத் தொடங்கும் காட்சியையும் நல்ல சகுனமாகக் காண்கிறாள் தோழி.

**வான்பெயல் நனைந்த புறத்த நோன்பியர்**
**தையூணிருக்கையில் தோன்று நாடன். (நற்றிணை : பா.எ 22)**

**மந்தியும் கடுவனும் நம்பிக்கையூட்டல்.**

குறிஞ்சி நிலம் என்பதால் அங்கு மலைகளில் வாழ்கின்ற மந்தியும், கடுவனும் ஒன்றுக்கொன்று அருகருகே நிற்கின்றன. இதனையும் நல்லதொரு நம்பிக்கையாகவே காண்கின்றாள். குடும்பமாக வாழத்தலைப்படுகின்ற தலைமாந்தரின் சிந்தனைகளுக்கு இவை ஏதுவான காரணிகளாகத் திகழ்கின்றன. நெற்கதிரை வாயில் அதக்கிக் கொண்டு மந்தி கடுவன் பக்கத்தில் இருப்பது போலத் தலைவனும் தலைவியும் அறத்தால் சேர்த்த பொருளைக் கொண்டு சேர்ந்து வாழ்ந்திடலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவை நிற்பதை உணர்ந்தாள் தோழி.

**முந்துவிளைப் பெருங்குரல் கொண்ட மந்தி**
**கல்லாக் கடுவனொடு நல்வரையேறி**
**அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்**
**திரையணற் கொடுங்கவுள் நிறைய முக்கி.(நற்றிணை:பா.எ 12)**

கூடலும் கூடல் நிமித்தமும் என்ற உரிப்பொருளின் உண்மையை உணர்த்துவனவாக மந்தியும் கடுவனும் கூடி வாழும் பண்பை எடுத்துக்காட்டுகின்றன. அறவழியில் பொருளீட்டி, விருந்தோம்பல் மேற்கொண்டு, துறவறத்தார், சுற்றத்தார், முதலிய இன்னபிறருக்கும் தான, தர்மங்கள் செய்து வாழ வேண்டும் என்றும் மறைமுகமாகத் தோழி கூறுகின்றாள்.

**பல்லிசொல்வதில் நம்பிக்கை**

தலைவன் தலைவியை விட்டுப்பிரிந்து பொருளீட்டச் செல்கின்றான். தன்னுடைய பிறைபோன்ற நெற்றியினைச் சுருக்கிக் கொண்ட தலைவி எப்போது வருவீர் என்று ஏக்கமும் வருத்தமும் தோன்றக் கேட்டு அனுப்பி வைக்கின்றாள். தலைவன் வினைமுடித்துத் திரும்புகின்றான். அப்பொழுது என்வரவினை முன்கூட்டியே என்னுடைய மாளிகையில் உள்ள பல்லி அவளுக்கு அறிவிக்குமா என்று கேள்வி எழுப்புகின்றான்.

**வருவம் என்னும் பருவரல் தீரப்**
**படுங்கொல் வாழி நெடுஞ்சுவர்ப்பல்லி(நற்றிணை :பா.எ 169)**

தலைவி கொண்டிருக்கும் துயரம் தீருமாறு, தலைவன் வருவான் என்ற நம்பிக்கையைத் தருமாறு பல்லி ஒலிக்காதா? எனக் கேட்கின்றான். "மனைவயிற் பல்லியும் பாங்கொத்து இசைத்தன"(கலி:


http://Creativecommons.org//license/by/4.0/.

பா.எ.11)என்று கலித்தொகைத் தலைவியும் பாடுவது பல்லி சொல் மீதிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றது.

**சடங்கு நிகழ்த்துதலும் நம்பிக்கையும்.**

இனக்குழுச் சமூகமாக மனிதன் வாழத்தலைப்பட்டது முதலே அவன் இயற்கையின் மிதவிஞ்சிய செயலாற்றல்களைக் கண்டு அஞ்சினான். பின்னர் அவற்றை வணங்கினான். அதன்பின்னர் அவற்றைச் சமாதானம் செய்யவும், அமைதிப்படுத்தவும், சின்னச்சின்ன செய்முறைகள் செய்தான். இவையே பிற்காலத்தில் சடங்குகளாக உருவம் பெற்றன என்று சமூகவில் அறிஞர்கள் கூறுவர். சங்க காலத்தைய மாந்தர்களுக்கும் இத்தகைய சடங்கு நிகழ்த்தும் நம்பிக்கை இருந்துள்ளதை நற்றிணைப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. மலைத்தெய்வங்கள், காடுறை தெய்வங்கள், இருப்பதாகச் சங்ககால மக்கள் நம்பியுள்ளனர். அவற்றிற்கு சடங்கு நிகழ்த்துவதன் வாயிலாக அவற்றுக்குத் தம்மால் நேர்ந்த குற்றங்குறைவுகளைச் சரிக்கட்டவும், ஈடுசெய்யவும் இயலும் என்று நம்பியுள்ளனர்.

குறிஞ்சி நிலத்தில் தேனெடுத்தல் கிழங்கு அகழ்தல் ஆகிய தொழில்களோடு வேட்டையும் இருப்பதை அறியலாம். இந்நிலையில் மலைப்பசுவை வேட்டையாடிய செய்தியையும் அதன்வழியாக மலைஅணங்கிற்கு செய்யப்பட்ட சடங்குமுறையினையும் அறிந்துகொள்ளமுடிகின்றது.

**அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது**
**பணைத்த பகழிப் போக்கு நினைத்து கானவன்**
**அணங்கொடு நின்றது மலை வான் கொள்க எனக்**
**கடவுள் ஓங்கு வரைபேண்மார் வேட்டு எழுந்து**
**கிளையடு மகிழும் குன்ற நாடன். (நற்றிணை :பா.எ 169)**

குன்றநாடன் தான் எய்த அம்பு பசுவைக் கொல்லாமல் சென்றது தெய்வக் குற்றம் என எண்ணினான். எனவே கடவுள் ஓங்கி நிற்கும் மலையையும் மலைத்தெய்வத்தையும் வணங்கிட விரும்பினான். வானம் மழைபொழிய வேண்டும் எனத் தன் சுற்றத்தாரோடு வணங்கினான்.

**நல்வினை தீவினை பற்றிய நம்பிக்கை**

ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்பது அறிவியல். செய்த ஒவ்வொரு செயலும் அதன் பயனுக்கு ஏற்ப நல்ஊழாகவோ அல்லது தீயூழாகவோ தொடரும் என்பது நம்பிக்கை. அந்த நம்பிக்கை சங்ககாலத் தலை மாந்தர்களிடமும் இருந்துள்ளதை அறியமுடிகின்றது.

**சென்ற காதலர்வழிப்பட்ட**
**நெஞ்சே நல்வினைப் பாற்றே ஈண்டு ஒழிந்து**
**ஆனாக் கௌவை மலைந்த**
**யானே தோழி நோய்ப் பாலேனே.(நற்றிணை பா.எ 107)**

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்கின்றான். அவனோடு தலைவியின் நெஞ்சம் செல்கின்றது அதற்குக் காரணம் அவள் நெஞ்சம் செய்த நல்வினை என்று நம்புகின்றாள் தலைவி.


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

அதைப் போலவே அவளது உடல் தலைவனுடன் செல்ல இயலாமல் ஊராரின் பழி தூற்றலுக்கு உள்ளாகிக் கிடக்கின்றது. இதற்குக் காரணம் அவள் செய்த தீவினையே ஆகும் என்று நம்புகின்றாள். இவ்வாறு செய்த நல்வினைக்குத் தகுந்த நன்மையும், தீவினைக்குத் தகுந்த தீமையும் நம்மைச் சூழும் என்று அறிகின்ற அறிவைத் தமிழர் பெற்றிருந்தனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

### வாழ்வுக்கு ஏற்ற பேருண்மைகள் மொழிதல்

மனித வாழ்க்கையானது நிலையில்லாத தன்மை உடையது. எனவே இன்பத்தைத் துய்ப்பதும், நல்ல அறங்களைச் செய்வதும், இல்லறக் கடமைகளைப் பிழைபடாமல் செய்வதுவும் தான் வாழ்க்கைக்கு ஏற்புடையது ஆகும். என்பது போன்ற நற்கருத்துக்களை வாழ்வியல் பேருண்மைகளாகத் தலைமக்கள் முன்வைக்கின்றனர்.

**வைகல்தோறும் இன்பமும் இளமையும்**
**எய்கணை நிழலின் கழியும் இவ் உலகத்து (நற்றிணை பா.எ 46)**

வில்லில் இருந்து புறப்படுகின்ற அம்பினைப் போல இந்த உலத்தில் இளமையும் அதன் இன்பமும் கடந்து சென்றுவிடும். இந்த உண்மையை அறிந்து, தலைவியைப் பிரியாது மணம் புரிக. என்கின்றாள் தோழி.

**நன்வாய் அல்லா வாழ்க்கை**
**மன்னாப் பொருட் பிணிப் பெரிதும் யாம் எனவே. (நற்றிணை பா.எ 46)**

துன்பத்தை மிகுதியாகத் தருகின்ற காட்டுப் பாதை வழியாக நிலையில்லாத தன்மையுடைய பொருளை ஈட்டுவதற்கு அவ்வழியே செல்வேன் என்பது நல்ல வாய்ப்பினைத் தராத வாழ்க்கை வாழ்வது போன்றது. என்கின்றாள் தோழி. இக்கருத்தின் வழி நிலையில்லாத பொருளை மட்டும் தேடுவது நல்ல வாழ்க்கை ஆகாது என்ற வாழ்க்கையின் பேருண்மையை உணர்த்துகின்றாள் தோழி.

**இறந்து செய் பொருளும் இன்பம் தரும் எனின்**
**இளமையின் சிறந்த வளமையும் இல்லை**
**இளமை கழிந்த பின்றை வளமை**
**காமம் தருதலும் இன்றே அதனால்**
**நில்லாப் பொருட் பிணிச் சேறி**
**வல்லே நெஞ்சம் வாய்க்க நின் வினையே. (நற்றிணை பா.எ.126)**

இறப்பைத் தருகின்ற காட்டுவழி சென்று ஈட்டும் பொருள் இன்பம் தருமா? தராது.இளமைக் காலத்தில் மட்டுமே வளமையும் செல்வமும் மகிழ்ச்சியைத் தரும். இளமை முடிந்த பின்னர் முதுமையில் செல்வத்தால் இன்பத்தையோ இளமையையோ கொடுக்க இயலாது. எனவே நிலையில்லாத செல்வத்தை நாட வேண்டாம். இளமையே சிறந்த செல்வம் ஆகும். என்று தன் நெஞ்சுக்குத் தானே சொல்கின்றான் தலைவன்.

### தலைவியின் அழகால் உயிர்க்கும் மாண்புகள்

அறம், நட்பு, நாணம் ஆகியவற்றைச் செல்வமாகப் பெற்றிருத்தலே வாழ்க்கைக்கு உகந்ததாகும். அறத்தாலாகும் பயன், நட்பின் மாட்சிமை, நாணத்தின் பெருமை ஆகியவற்றை


http://Creativecommons.org//license/by/4.0/.

உணர்;ந்திருந்தான் தலைவன். தலைவியின் அழகில் மயங்கியதால், தன்னிடமிருந்த அத்தனை நற்பண்புகளையும் தான் இழந்துவிட்டதாக எண்ணுகின்றான்.

**நயனும் நண்பும் நாணு நன்கு உடைமையும்**
**பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும்**
....... ...... .........
**அரி மதர் மழைக்கண் காணா ஊங்கே.(நற்றிணை பா.எ 160)**

தலைவியின் அன்பும், அழகும் கிடைத்தால் மீண்டும் அத்தனை மாண்புகளும் தன்னுள் உயிர்க்கும் என்று கூறுகின்றான். இதன்வழி கணவன் மனைவி இணைந்து வாழ்கின்ற இல்லறத்தின் வழியாகத்தான் வாழ்க்கைக்குரிய நல்ல அறங்கள் ஒருவனுக்குள் உருவாகமுடியும் என்பதையும், தன்னிறைவு பெற்ற மனிதனால் தான் அறங்களைச் செய்ய இயலும் என்பதையும் கூறுகின்றான்.

## தொழில் மற்றும் கருவிகள்.

சங்ககாலத்து மக்கள் செய்த தொழில்கள், அவர்கள் பயன்படுத்திய கருவிகள் பற்றிய செய்திகள் காணக்கிடைக்கின்றன. ஒவ்வொரு கருவிகளையும் ஒவ்வொரு காரணத்திற்காகப் பயன்படுத்தியமை தெரிகின்றது.

வில்பொறி

கோடை காலத்தில் தண்ணீர் வற்றிப்போகும் நிலையில் தண்ணீரை எடுத்துவந்து மலையின் உச்சியில் கிடக்கும்பெரிய பள்ளங்களில் ஊற்றிக் குறவர்கள் பாதுகாத்துள்ளனர். அந்தத் தண்ணீர் நிறைத்துள்ள பள்ளததை மூடி வைக்கப் பயன்படுத்தியதே வில்பொறி என்னும் கருவியாகும். இதனை அறிந்த யானைகள் அப்பொறியை முறித்துத் தண்ணீரை அருந்தியுள்ளன.

**வில்கடிந்து ஊட்டின பெயரும்**
**கொல் களிற்று ஒருத்தல் சுரன் இறந்தோரே.(நற்றிணை பா.எ:92)**

**சுடுமண் தசும்பும் மத்தமும்**

பாலை நிலத்தில் காணலாகும் களர் நிலத்திற்கு உவமை சொல்ல வந்த தலைவி மண்தாழியில் உள்ள தயிரை மத்தால் கடையும் போது அதில் உள்ள தயிரின் துளிகள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பது போல உப்புப் பூத்த களர் நிலத்தின் வழி நம் தலைவர் செல்கின்றார் என்று கூறுகின்றாள். முல்லை நிலத்து ஆயர், ஆய்ச்சியர் செய்யும் தொழிலைப் பாலை நிலத்தில் வாழ்ந்துள்ள தலைவி அறிந்திருக்க முடியுமா? மேலும், பாலை நிலம் என்பது

**"முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிமங் கொள்ளும்"**
**(சிலம்போ சிலம்பு -சுந்தர சண்முகனார் ப.144)**

என்பதையும் இச்செய்தியின் வழியாக அறிய முடிகின்றது. தயிர் கடைந்து வெண்ணை எடுக்கும் தொழில் நிகழ்ந்த செய்தியையும், மண்ணாலான தாழி, மரத்தாலான மத்து போன்ற கருவிகள் செய்வதற்கு சங்ககாலத் தமிழர் அறிந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**சுடுமண் தசும்பின் மத்தம் தின்ற**


http://Creativecommons.org//license/by/4.0/.

**பிறவா வெண்ணெய் உருப்பிடத் தன்ன. (நற்றிணை பா.எ.84)**

மண்ணைச் சுட்டுத் தாழிகள் செய்வதற்கு அறிந்துள்ளனர். நெருப்பின் பயனைத் தெரிந்துள்ளனர். மரத்தைச் சீர் செய்து மத்தம் என்கின்ற மத்து செய்வதற்கு அறிந்துள்ளனர்.

**வேல்,வில்,அம்பு,கவண்,ஈர்வாள்,வரிவலை,ஊதுலை கருவிகள் பயன்பாடு**

வேல் என்னும் கருவியையும் அதன் வடிவத்தையும் இத்தி மரத்தைச் சான்று காட்டிக் நற்றிணைப் பாடல் வெளிப்படுத்துகின்றது. முல்லை நிலம் காடும் காடுசார்ந்த பகுதியாக இருப்பதால் அங்கு இத்தகைய மரங்கள் இருந்துள்ளன.

**வேலின் இற்றித் தோயா நெடுவீழ்.(நற்றிணை பா.எ.162)**

பாலை நிலத்தில் வழிப்பறி செய்த ஆறலைக் கள்வர்கள் வேல், வில், அம்பு ஆகியவற்றைப் பயன்படுத்தியதை அறிந்துகொள்ளமுடிகின்றது.

**செங்கோல் வாளிக் கொடுவில் ஆடவர்.(நற்றிணை பா.எ.164)**

தண்ணீர் உண்பதற்காக வந்த யானையை விரட்டக் குறவர்கள் அம்பு, கவண், கிணைப்பறை போன்றவற்றைப் பயன்படுத்திய செய்தியை அறியமுடிகின்றது.

**கணையர் கிணையர் கைபுனை கவணர்**
**விளியர் புறங்குடி ஆர்க்கும் நாட (நற்றிணை பா.எ108)**

கணை எனப்படும் அம்பினையும் கிணை எனப்படும் பறைக் கருவியையும் கவண்களையும் ஏந்திக்கொண்டு ஆரவாரித்துச் செல்கின்ற நாடனே என்று தோழி கூறுவதிலிருந்து இச்செய்தியை அறிந்துகொள்ள முடிகின்றது.

பரதவர்கள் மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொள்கின்றனர். இந்நிலையில் அவர்கள் தங்களது தொழிலுக்காக வரிவலை என்னும் கருவியையும் சுராமீனின் வாயைப்போன்ற ஈர்வாள் என்ற கருவியையும் பயன்படுத்தியுள்ளதை அறிந்துகொள்ளமுடிகின்றது.

**வரிவலைப் பரதவர் கருவினைச் சிராஅர்**
**மரன் மேற்கொண்டு மான் கணம் தகைமார்.**
**வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி. (நற்றிணை பா.எ:111)**

மரக்கலத்தில் சென்று வரிவலையைப் பயன்படுத்தி ஈர்வாள் போன்ற வாயினை உடைய சுறாமீனைப் பிடித்து வந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து கொள்ளமுடிகின்றது. மேலும் அக்காலத்தில் இரவுபகல் பாராமல் கொல்லர்கள் தங்களது ஊதுலைக் கருவிகளைப் பயன்படுத்தித் தொழில் மேற்கொண்ட செய்தியையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**நல்அரா நடுங்க உரறிக் கொல்லன்**
**ஊதுலைக் குருகின் (நற்றிணை பா.எ 125)**

அக்காலத்து மக்கள் உணவுக்குப் பயன்படுத்திய தினையைத் தனியே பிரித்தெடுக்க யானைகளைப் பழக்கியிருந்த செய்தியை அறிய முடிகின்றது. யானைகளும் தொழில் கருவியாகப் பயன்பட்டிருக்கின்றன.

**மென்தினை நெடும்போர் புரிமார்**
**துஞ்சுகளிறு எடுப்பும் தம் பெருங்கல் நாட்டே(மேலது பா.எ 125)**


http://Creativecommons.org//license/by/4.0/.

**மூங்கில் தட்டை கருவி**

கொடிச்சியர் என்னும் பெண்கள் தங்களது தொழிலாகிய தினைப்புனம் காத்தலை மேற்கொண்டுள்ளனர். அந்நிலையில் அவர்கள் தினைகளைத் தின்ன வருகின்ற கிளிகளை ஓட்டுவதற்கு மூங்கில் தட்டை என்னும் கருவியைப் பயன்படுத்தி உள்ள செய்தியை அறியமுடிகின்றது.

**செவ்வாய்ப் பாசினங் கடீஇயர் கொடிச்சி**
**அவ்வாய்த் தட்டையொடு அவைந யாகென (நற்றிணை பா.எ.**134)

இனிய வார்;த்தைகளைக் கூறித் தினைப்புனம் காப்பதற்கு தாயார் அனுப்பி வைத்தனர். கிளிகளை ஓட்டுவதற்குத் தட்டை என்ற கருவியைப் பயன்படுத்தியதை அறியலாம்.

**காவல் மரம் பற்றிய நம்பிக்கை**

சங்ககாலத்து மன்னர்கள் தங்களது நாட்டையும், மக்களையும் பாதுகாத்தனர். வீரத்திற்கு முக்கியத்துவம் தந்தனர். அதற்காகக் காவல் மரம் என்னும் ஒன்றை வளர்த்தனர். அதற்குத் தீங்கு வராமல் பார்த்துக்கொண்டனர். அதில் உள்ள கிளை, இலை, பூ, காய் எதனையும் வெட்டக்கூடாது பறிக்கக்கூடாது. அவையனைத்தும் புனிதமாகக் காத்துப் போற்றப்பட வேண்டும். இந்நிலையில் பெரியன் என்ற அரசனுக்கு உரிய காவல் மரமாகப் புன்னைமரம் இருந்துள்ளது. இதனை அவனோடு எதிர்த்துப் போரிட்ட அன்னி என்னும் அரசன் வெட்டி வீழ்த்தியுள்ளான்.

**அன்னியும் பெரியன் அவனும் விழுமிய**
**இருபெரு வேந்தர் பொருகளத்து ஒழித்த**
**புன்னை விழுமம் போல (நற்றிணை பா.எ.**180)

இக்கருத்தின் வழியாக மன்னர்கள் தங்களது நம்பிக்கைக்குரிய மரமாகப் புன்னைமரத்தைக் கொண்டுள்ளதையும், புன்னை மரத்தைத் தங்கையாகப் பாவித்து வளர்த்தற்குக் காரணம் அது காவல் மரம் என்ற நம்பிக்கையுமேயாகும். "நும்மினும் சிறந்தது நுவ்வையாகுமென்று அன்னை கூறினள் புன்னையது சிறப்பே" நற் : புன்னை மரத்திற்குத் தீங்கு நிகழ்ந்தால் மன்னர் குலத்திற்கே தீங்கு வரும் என்ற நம்பிக்கை இருந்துள்ளது. எனவே தன் சுற்றத்தில் ஒருவராகவே கருதி அதனை வளர்த்துள்ளனர்.

**பண்டமாற்று முறை பற்றிய செய்தி**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களது தேவையைப் பண்டமாற்றுமுறை வழியாகத் தீர்;த்துக் கொண்டனர். ஒரு நிலத்தில் விளைந்த உபரியான மீந்த பொருளை மற்றொரு நிலத்தில் வாழும் மக்களோடு மாற்றிக் கொண்டனர்.

**தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி (நற்றிணை பா.எ.**183)

உப்பு விற்கின்ற உமணர்கள் தங்களது நிலத்தில் விளைந்த உப்பினைக் கொடுத்து அதற்குப் பதிலாக வெண்மையான நிறத்திலான நெல்லினைத் தந்துள்ள செய்தியை அறிந்து கொள்ளமுடிகின்றது.

**கொல்லிப்பாவை பற்றிய செய்தி.**


http://Creativecommons.org//license/by/4.0/.

சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் மலையில் உறைந்த தெய்வங்களை வணங்கியிருக்கின்றனர். தெய்வங்களைப் புடைப்புச் சிற்பங்களாகச் செய்துவைத்துள்ளனர். பொறையன் என்னும்மன்னனது ஊரின் பெயர் கொல்லிமலையாகும். அதின்மீது பாணர்கள் பொறையனிடம் பரிசாகப் பெற்ற குதிரைகளைக் கொண்டு ஏறிக் கடந்து செல்வர். இந்நிலையில் அம்மலையில் தெய்வச்சிலையைப்போல பாவை என்னும்தலைவியைக் கண்டதாகத் தலைவன் சொல்கின்றான்.

**உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்**
**தேன்உடை நெடுவரைத் தெய்வம் எழுதிய**
**வினைமாண் பாவை அன்னோள்(நற்றிணை பா.எ185)**

தலைவியைச் சந்திக்க வருகின்ற தலைவன் கொடுமைகள் நிறைந்த காட்டுவழியில் வருகின்றான். அந்த மலையில் கொல்லிப்பாவையெனும் தெய்வமும் இருக்கின்றது. அது தலைவியின் பசலை பூத்த மேனியைப் போன்ற நிறத்தால் ஆனது. அது இளவெயில்போன்ற ஒளியைத் தர வல்லது. அந்த ஒளி எனக்கு வழியில் காவலாக நிற்கிறது. அதன் உதவியால் நான் பாதுகாப்பாக வருவேன் என்கிறான் தலைவன்.

**கொல்லிக் குடவரைப்**
**பூதம் புணர்த்த புதிது இயல் பாவை**
**விரிகதிர் இளவெயில் தோன்றியன்ன(நற்றிணை பா.எ 192)**

கொல்லிப்பாவை என்பது காவல் காக்கும் மலைத்தெய்வமாகவும் நம்பப்பட்டுள்ளதை அறிந்து கொள்ளமுடிகின்றது.

முடிவுரை

நற்றிணை இலக்கியத்தின் வழியாகப் பல வரலாற்றுச் செய்திகளை அறிய இயலுகின்றது. மேலும், பெயர் தெரியாத புலவர்களாக இருந்தாலும் தங்களது கவி நுட்பத்தால் சங்ககாலத்து மன்னர்கள், மக்கள், ஆகியோரது வாழ்வியல் முறைகளைப் பதிவுசெய்து தந்துள்ளனர். விலங்குகள் பறவைகள் வழியாகக் காதல் வாழ்க்கையை முன்னிலைப்படுத்தியுள்ளனர். தலைமக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பேருண்மைகளைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தது அறியமுடிகின்றது.

துணைநின்ற நுல்கள்

1. நற்றிணை - கதிர் மகாதேவன் -உரையாசிரியர் - டிசம்பர் 2022- வர்த்தமானன் பதிப்பகம்,சென்னை
2. சிலம்போ சிலம்பு - முனைவர் சுந்தர சண்முகனார் - அக்டோபர் 1992- வானதி பதிப்பகம் சென்னை
3. முல்லைப் பாட்டு -ஆராய்ச்சி உரை -கா.ர.கோவிந்தராஜ முதலியார் -1952 -சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.

http://Creativecommons.org//license/by/4.0/.